# மட்டக்களப்பு வரலாற்றில் வன்னியர்கள் - நற்பிட்டிமுனையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

முழுப் பெயர்: இராசநாயகம் ஹரிஸ்காந்

பதிவு இலக்கம் : EU/IS/2018/AC/327

சுட்டெண்: CS 8727

LIBRARY
14 MAY 2025
EASTERN UNIVERSITY, SRI LANKA

FAC1561
Project Report
Main Library, Eastern University, Sri Lanka

இவ்வாய்வுக் கட்டுரையானது வரலாறு இளங்கலைமாணி சிறப்புக் கற்கைநெறியின் இறுதி வருடப் பரீட்சையின் ஓர் அலகாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

வரலாற்றுத்துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை

2024.

## ஆய்வுச் சுருக்கம்

இடைக்கால மட்டக்களப்பு வரலாற்றில் கரைவாகுப்பற்று வன்னியர்களுக்கு முக்கிய பங்குண்டு. இவர்கள் மட்டக்களப்பு அரசியல் முறைகளிலும், சமூக வழமைகளிலும், பொருளாதாரத்திலும் பெற்றிருந்த முக்கியத்துவம், அது சார்ந்து அவர்களது அதிகாரத்தினுடைய தன்மை எவ்வாறு இருந்துள்ளது என்பதனைக் கண்டறிவது இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வானது கரைவாகுப்பற்று வன்னிச் சிற்றரசர்கள் தொடர்பாக கிடைக்கின்ற ஆவணங்கள், நேர்காணல்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று ஆய்வு அணுகுமுறையின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மத்தியகால மட்டக்களப்பிலே கரைவாகுப்பற்று வன்னிமைகள் சமூக வழமைகளிலும், பொருளாதாரத்திலும் முதன்மையானதொரு இடத்தினையே பெற்றிருந்துள்ளனர். கரைவாகுப்பற்று வன்னிமைகள் மிகுந்த அதிகாரம் கொண்டவர்களாகக் காணப்பட்ட போதிலும் அவர்களது ஆட்சியானது எதேச்சதிகாரமாக இல்லாது வரையறுக்கப்பட்டதாகவே காணப்பட்டுள்ளது. மேலாதிக்கம் செலுத்தக்கூடிய அரசின் (ஐரோப்பியர்கள்) கீழ் கரைவாகுப்பற்று வன்னிமைகள் சில காலம் இருந்தாலும் தங்களது ஆட்சிப் பகுதியில் சுதந்திரமான ஆட்சியினையே செலுத்தியுள்ளனர். மட்டக்களப்பில் காலனித்துவ ஆட்சியின் ஆரம்ப கால கட்டங்களில் கரைவாகுப்பற்று வன்னிமைகள் பெற்றிருந்த ஆட்சியதிகாரத்தில் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தாலும், சமூக வழமைகள் மற்றும் பொருளாதார ரீதியில் வன்னிமைகள் முக்கியத்துவம் பெற்றவர்களாகவே இருந்துள்ளனர். காலப்போக்கில் பிரித்தானியர்களது ஆட்சியிலே வன்னியர்களது அதிகாரங்கள் பறிக்கப்பட்டிருந்தாலும் பின்னர் அவர்களாலேயே கரைவாகுப்பற்றுக்கு வன்னிமைகள் நியமிக்கப்பட்டு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் நீதிமன்றங்களில் வழக்குளை விசாரித்து தண்டனை வழங்கும் அதிகாரம் உடையவர்களாகவும், ஆலயங்களுக்கு தலைமை தாங்கி நிர்வாகங்களை திறன்பட நடத்துபவர்களாகவும், மக்களின் குறைகளை நிவர்த்தி செய்பவர்களாகவும் காணப்பட்டனர். நாடு சுதந்திரம் அடைந்ததை அடுத்து நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் கரைவாகுப்பற்று வன்னியர்கள் பெற்றிருந்த சமூக, பொருளாதார ரீதியிலான முக்கியத்துவங்களும் குறைவடைந்தது குறிப்பாக சுதந்திரத்தின் பின் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தங்களின் போது ஆலய நிர்வாகத்தின் தலைமைப்பதவிகள் வன்னியர் பரம்பரையைச் சேர்ந்த வேறு குடிகளுக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டு குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. தற்காலத்தில் கரைவாகுப்பற்று வன்னியர்கள் ஆலய நிர்வாகங்களில் தலைமைப் பதவியில் இருப்பவர்களாக மாத்திரம் காணப்படுகின்றனர். இருந்த போதிலும் கரைவாகுப்பற்று பகுதியில் இருந்த வன்னியர்களுடைய ஆட்சி மட்டக்களப்பில் இருந்த அரசுகளில் இருந்து முக்கியமானதொரு ஆட்சியாக காணப்பட்டுள்ளது.


அரும்பதங்கள்: வன்னியர்கள், பற்றுக்கள், மத்தியகாலம், காலனித்துவம்.

# பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | i |
| நன்றியுரை | ii |
| ஆய்வுச் சுருக்கம் | iii |
| 1. ஆய்வு அறிமுகம் | 1 - 8 |
| 2. இலங்கையில் வன்னியர்களது வருகையும் பரவலும் | 9 – 32 |
| 3. கரைவாகுப்பற்று வன்னிமையின் தோற்றமும் வளர்ச்சியும் | 33 – 56 |
| 4. கரைவாகு பற்று வன்னியர்களும் ஆலய பரிபாலனமும் | 57 – 72 |
| 5. முடிவுரை | 73 – 77 |
| உசாத்துணைகள் | 78 – 81 |
| பின்னிணைப்புக்கள் | iv - xvii |